**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண்.244/மா/2024
நாள் 03.11.2025

S.V. உதயகுமார் — முறையீட்டு மனுதாரர்
நாகர்கோவில்

ஆணையர் — எதிர் மனுதாரர்
நாகர்கோவில் மாநகராட்சி

நாகர்கோவில், பார்வதிபுரம், M.S ரோடு, கதவு எண் 439A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S.V.உதயகுமார் என்பவரின் 28.10.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.10.2024 அன்று பெறப்பட்டு 244/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

நாகர்கோவில், பார்வதிபுரம், M.S ரோடு, கதவு எண் 439A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S.V.உதயகுமார் என்பவர் 28.10.2024 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"நாகர்கோவில் மாநகராட்சி வடசேரி பேருந்து நிலையத்தில் தமிழ் புத்தகக் கடை வைப்பதற்கு ரூபாய் 7150/– நிர்ணயம் செய்து 30.09.2022 மன்ற தீர்மானம் பாஸ் செய்து Single Tender ஆக கடை வழங்கப்பட்டுள்ளது. File No.5747/2022/A8 அதற்கான மன்ற தீர்மானம் புகார் கடிதத்தில் இணைக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது மன்ற தீர்மானத்தில் குறிப்பிட்டிருந்த நிபந்தனையை மீறி டீக்கடையாக செயல்பட்டு வருகிறது. அதற்கான புகைப்படம் நகல் இந்த புகார் கடிதத்தில் இணைக்கப்பட்டுள்ளது. இந்த கடைக்கு அருகில் தற்போது புதிதாக மாநகராட்சி கடைகள் கட்டி ஏலம் விட்டது. அவைகள் அனைத்தும் சுமார் ரூபாய் 70,000/–முதல் ரூபாய் 99,999/– வரை மாத வாடகைக்கு சென்றுள்ளது. அதற்கான மன்ற தீர்மானம் 30.08.2024 அன்று நிறைவேற்றப்பட்டது. File No.8231/2024/A6. அதற்கான நகல் புகார் கடிதத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த இருமன்ற தீர்மானத்தையும் ஒப்பிடும் போது மாநகராட்சிக்கு பெருமளவில் வருவாய் இழப்பு ஏற்படுகிறது. மேலும் தமிழ் புத்தகக் கடை என்று வழங்கப்பட்ட சலுகையை கடை

உரிமையாளர் மீறி செயல்பட்டது உறுதியாகிறது. ஆகையால் இந்த கடைக்கு வழங்கிய உரிமத்தை ரத்து செய்ய உத்திரவிடுவதுடன் இதனால் மாநகராட்சிக்கு ஏற்பட்ட நஷ்டத்தை கணக்கிட்டு சம்பந்தப்பட்ட அரசு ஊழியர் மற்றும் ஒப்பந்ததாரர் மீது நடவடிக்கை எடுக்க தணிக்கை துறைக்கு உத்தரவிடுமாறு வேண்டுகிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார். மேலும் தனது 27.01.2025 நாளிட்ட மனுவுடன் புகைப்பட ஆதாரத்தை சமர்ப்பித்து உரிய நடவடிக்கை எடுக்க மீண்டும் கோரியுள்ளார்.

மேலும் தனது 27.01.2025 நாளிட்ட மனுவுடன் புகைப்பட ஆதாரத்தை சமர்ப்பித்து உரிய நடவடிக்கை எடுக்க மீண்டும் கோரியுள்ளார்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவ 20.12.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் தனது 24.01.2025 நாளிட்ட கடிதம் ந.க. எண் 5747/2022/அ6–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

“24.06.2022 நாளிட்ட விண்ணப்பத்தில், திருமதி D.சுமிதா என்பவர் மாநகராட்சிக்கு சொந்தமான வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்தில் அரசு அணை (2ப) எண் 120, நாள் 10.07.2007–ன்படி புத்தக கடை நடத்துவதற்கு இடம் ஒதுக்கீடு செய்து தர கோரியிருந்தார்.

மேற்படி அரசு ஆணை (2ப) எண் 120, நாள் 10.07.2007–இல் உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள பேருந்து நிலையங்களில் தமிழ் புத்தகங்கள் விற்பனையை அதிகரிக்க ஏதுவாக பெட்டி கடைகள் அமைக்கப்பட்டு தமிழ் புத்தங்கள் மட்டுமே விற்பனை செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் முதலில் வருபவருக்கு முன்னுரிமை என்ற முறையில் குறைந்த வாடகையில் வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில் மாமன்ற தீர்மான எண் 567 நாள் 30.09.2022ல் அனுமதி வழங்கப்பட்டதின்படி, மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை உத்தரவுபடி வடசேரி பேருந்து நிலையத்தில் தமிழ் புத்தக கடை வைப்பதற்கு உத்திரவு வழங்கப்பட்டது.

திரு ஜான்சன் மற்றும் ராஜேஸ்வரி என்பவர்களின் புகார் கடிதங்கள் வரப்பெற்றதின் அடிப்படையில் இம்மாநகராட்சி வருவாய் ஆய்வாளர் நேரடியாக ஆய்வு செய்யப்பட்டதில் மேற்படி கடையில் புத்தகங்கள், தினசரி நாளிதழ்கள், குடிநீர் பாட்டில்கள் மற்றும் பொருட்கள் வைத்து விற்பனை செய்வதாகவும், கடை உரிமைதாரரிடம் புத்தகங்களை தவிர வேறு எந்த பொருட்களும் விற்பனை செய்ய கூடாது என்றும் பொது மக்களுக்கு இடையூறாக நடந்து கொள்ள கூடாது என்றும் நேரடியாக தெரிவித்துள்ளதாக அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

மேற்படி மாநகராட்சி வருவாய் ஆய்வாளரின் அறிக்கையின்படி இவ்வலுவலக அறிவிப்பு கடிதம் நாள் 20.02.2023–ன் மூலம் மேற்படி புகார் சம்பந்தமான விளக்கத்தினை இவ்வறிவிப்பு கிடைக்கப் பெற்ற 3 தினங்களில் எழுத்து மூலமாக மாநகராட்சிக்கு தெரிவிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் தங்களின் உரிமத்தினை எந்தவொரு முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

திருமதி சுமிதா என்பவரின் 25.02.2023 நாளிட்ட கடிதத்தில் புகாரில் தெரிவித்திருந்த பொருட்கள் எதுவும் விற்பனை செய்யப்படவில்லை என தெரிவித்துள்ளார். ஆனால், திரு S.V. உதயகுமார் 5வது வார்டு மாமன்ற உறுப்பினர் புகார் மனுவில் மேற்படி கடை உரிமைதாரர் நிபந்தனைகளை மீறி டீ கடை நடத்தி வருகிறார் என புகைப்படத்துடன் புகார் வரப்பெற்றுள்ளது. எனவே மாநகராட்சி ஏல நிபந்தனைகளை மீறி செயல்பட்டதால்

கடை உரிமையாளருக்கு வழங்கப்பட்ட உரிமத்தினை ரத்து செய்து மேற்படி கடையினை 24 மணி நேரத்திற்குள் முழுவதுமாக அகற்றிட வேண்டும் என நாகர்கோவில் மாநகராட்சியால் 02.01.2025 நாளிட்ட இறுதி அறிவிப்பு மூலம் அறிவுறுத்தப்பட்டது.

திருமதி D.சுமிதா என்பவரின் 21.01.2025 நாளிட்ட கடிதத்தில் மேற்படி கடையில் தமிழ் புத்தகம் மட்டும் வைத்து வியாபாரம் செய்து மாநகராட்சிக்கு கடை வாடகை செலுத்துவதற்கு மிகவும் சிரமாக இருந்த காரணத்தினால் தமிழ் புத்தகத்துடன் கேனில் வைத்த டீ மட்டும் விற்பனை செய்து வந்தேன் என்றும் தற்போது இப்புகார் வரப்பெற்ற காரணத்தினால் மேற்படி டீ விற்பனையை நிறுத்திவிட்டு தமிழ் புத்தகங்கள் மட்டும் வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். எனவே கடையின் உரிமத்தினை ரத்து செய்ய வேண்டாம் என்றும் தொடர்ந்து மேற்படி கடையினை நடத்திட அனுமதி வழங்க கேட்டு கடிதம் சமர்ப்பித்துள்ளார்.

எனவே, மாண்புமிகு உள்ளாட்சி முறை மன்ற நடுவம் மேற்படி புகார் மனுவினை ஆராய்ந்து இவ்வறிக்கையினை ஏற்று புகார் மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு பணிந்து சமர்ப்பித்துக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 12.08.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 24.07.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 12.08.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"நாகர்கோவில் மாநகராட்சி, வடசேரி பேருந்து நிலையத்தில், தமிழ் புத்தகக் கடை வைப்பதற்கு ரூ.7,150/– நிர்ணயம் செய்து 30.09.2022 மன்ற தீர்மானம் மூலம் செய்து Single Tender ஆக கடை வழங்கப்பட்டுள்ளது. இதற்கான கோப்பு எண்5747/2022/A8ஆகும். தற்போது மன்ற தீர்மானத்தின்படி பேருந்து நிலையத்தின் நேரக் காப்பாளர் அலுவலகத்திற்கு எதிரே காலியாக உள்ள இடத்தில் புத்தக கடை அமைக்காமல் நிபந்தனையை மீறி டீக்கடையாக செயல்பட்டு வருகிறது. இந்த கடைக்கு அருகில் புதிதாக மாநகராட்சி கடைகள் கட்டி மன்ற தீர்மானம் 30.08.2024 மூலம் ஏலம் விடப்பட்டது. இவைகள் அனைத்தும் சுமார் ரூ.70,000/–முதல் ரூ.99,999/– வரை மாத வாடகைக்கு விடப்பட்டுள்ளது. இதற்கான கோப்பு எண்8231/2024/A6ஆகும். இரு தீர்மானத்தையும் ஒப்பிடும் போது மாநகராட்சிக்கு பெரும் அளவில் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. தமிழ் புத்தகக் கடை என்ற அடிப்படையில் வழங்கப்பட்ட சலுகையை கடை உரிமையாளர் மீறி டீ கடையாக நடத்தப்பட்டது உறுதியாகிறது. இந்த கடைக்கு வழங்கிய உரிமத்தை ரத்து செய்ய உத்திரவுவிடுவதுடன் மாநகராட்சிக்கு ஏற்பட்ட நஷ்டத்தை கணக்கிட்டு சம்பந்தப்பட்ட அரசு ஊழியர் மற்றும் ஒப்பந்ததாரர் மீது நடவடிக்கை எடுக்க தணிக்கை துறைக்கு உத்தரவிடுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிந்து வேண்டுகிறேன்.

மேற்கண்ட புகார்கள் குறித்து 29 பக்கங்கள் கொண்ட ஆவணம் – வால்யூம்–I இத்துடன் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கிறேன்''.

6. நாகர்கோவில் மாநகராட்சி உதவி ஆணையர் மற்றும் உதவியாளர் ஆகியோர் 12.08.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

“திருமதி D.சுமிதா என்பவர் மாநகராட்சிக்கு சொந்தமான வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்தில் அரசு அணை (2ப) எண் 120 நாள் 10.07.2007ன்படி புத்தக கடை நடத்துவதற்கு இடம் ஒதுக்கீடு செய்து தர கோரி விண்ணப்பித்து இருந்தார்.

மேற்படி அரசு ஆணை (2ப) எண் 120 நாள் 10.07.2007 இல் உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள பேருந்து நிலையங்களில் தமிழ் புத்தகங்கள் விற்பனையை அதிகரிக்க ஏதுவாக பெட்டி கடைகள் அமைக்கப்பட்டு தமிழ் புத்தங்கள் மட்டுமே விற்பனை செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் முதலில் வருபவருக்கு முன்னுரிமை என்ற முறையில் குறைந்த வாடகையில் வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி வடசேரி பேருந்து நிலையத்தில் தமிழ் புத்தக கடை அமைக்க உத்திரவு வழங்கப்பட்டது. தமிழ் புத்தகக் கடை மேற்படி இடத்தில் நடத்தி வந்த நிலையில் பேருந்து நிலையத்தில் பராமரிப்பு பணி நடைபெற்ற காரணத்தினால், மேற்படி புத்தகக் கடை மற்றும் அருகில் உள்ள வங்கி ATM ஆகியவற்றை அருகில் உள்ள இடத்திற்கு மாற்றிக் கொள்ள வாய்மொழியாக அனுமதி அளிக்கப்பட்டதின் பேரில் மாற்றி அமைக்கப்பட்டது.

திரு ஜான்சன் மற்றும் ராஜேஸ்வரி என்பவர்களின் புகார் கடிதங்கள் அடிப்படையில், இம்மாநகராட்சி வருவாய் ஆய்வாளர் நேரடியாக ஆய்வு செய்யப்பட்டு, மேற்படி கடையில் புத்தகங்கள், தினசரி நாளிதழ்கள், குடிநீர் பாட்டில்கள் மற்றும் பொருட்கள் வைத்து விற்பனை செய்வது கண்டறியப்பட்டு, கடை உரிமைதாரரிடம் புத்தங்களை தவிர வேறு எந்த பொருட்களும் விற்பனை செய்யக்கூடாது என்றும், பொது மக்களுக்கு இடையூறாக நடந்து கொள்ளக்கூடாது என்றும் நேரடியாக அறிவுறுத்தப்பட்டது என்ற வருவாய் ஆய்வாளர் அறிக்கையின்படி கடைதாரருக்கு தாக்கீது வழங்கப்பட்டது.

மேலும் திரு S.V. உதயகுமார் 5வது வார்டு மாமன்ற உறுப்பினர் தனது புகார் மனுவில் மேற்படி கடை உரிமைதாரர் நிபந்தனைகளை மீறி டீ கடை நடத்தி வருகிறார் என்று புகைப்படத்துடன் தெரிவித்ததன் அடிப்படையில் மாநகராட்சி ஏல நிபந்தனைகளை மீறி செயல்பட்டதால் கடை உரிமையாளருக்கு வழங்கப்பட்ட உரிமத்தினை ரத்து செய்து மேற்படி கடை காலி செய்யப்பட்டது.

மேற்கண்ட கடை அரசாணையின்படி கடை ஒதுக்கீடு செய்யப்பட்டதினால், அரசுக்கு எந்தவித வருவாய் இழப்பு இல்லை என்று இம்முறைமன்ற நடுவத்திற்கு தெரிவித்துக் கொள்கிறோம்.”

7. மனுதாரரின் மனுக்கள், வாக்குமூலம் மற்றும் ஆவணம், நாகர்கோவில் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவி ஆணையர், உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

நாகர்கோவில் மாநகராட்சி, வடசேரி பேருந்து நிலையத்தில், தமிழ் புத்தகக் கடை வைப்பதற்கு ரூ.7,150/– நிர்ணயம் செய்து 30.09.2022 மன்ற தீர்மானம் மூலம் Single Tender ஆக கடை வழங்கப்பட்டு, தற்போது மன்ற தீர்மானத்தின்படி பேருந்து நிலையத்தின் நேரக் காப்பாளர் அலுவலகத்திற்கு எதிரே காலியாக உள்ள இடத்தில் புத்தக கடை அமைக்காமல் நிபந்தனையை மீறி டீக்கடையாக செயல்பட்டு வருகிறது என்பதும், இந்த கடைக்கு அருகில் புதிதாக மாநகராட்சி கடைகள் கட்டி மன்ற தீர்மானம் 30.08.2024 மூலம் ஏலம் விடப்பட்டு, இவைகள் அனைத்தும் சுமார் ரூ.70,000/–முதல் ரூ.99,999/– வரை

மாத வாடகைக்கு விடப்பட்டுள்ளது என்பதும், மேற்கண்ட இரு தீர்மானத்தையும் ஒப்பிடும் போது மாநகராட்சிக்கு பெரும் அளவில் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், தமிழ் புத்தகக் கடை என்ற அடிப்படையில் வழங்கப்பட்ட சலுகையை கடை உரிமையாளர் மீறி டீ கடையாக நடத்தப்பட்டதால், அக்கடைக்கு வழங்கிய உரிமத்தை ரத்து செய்ய உத்திரவிடுவதுடன் மாநகராட்சிக்கு ஏற்பட்ட நஷ்டத்தை கணக்கிட்டு சம்பந்தப்பட்ட அரசு ஊழியர் மற்றும் ஒப்பந்ததாரர் மீது நடவடிக்கை எடுக்க தணிக்கை துறைக்கு உத்தரவிடுமாறு கோரியுள்ளது மனுதாரரின் மனு, மனுதாரர் சமர்ப்பித்துள்ள ஆவணம் மற்றும் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

திருமதி D.சுமிதா என்பவர் மாநகராட்சிக்கு சொந்தமான வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்தில் அரசு ஆணை (2ப) எண்.120 நாள் 10.07.2007ன்படி இடம் ஒதுக்கீடு செய்து தர கோரி விண்ணப்பத்திருந்தார் என்பதும், மேற்கண்ட அரசாணையின்படி, உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள பேருந்து நிலையங்களில் தமிழ் புத்தகங்கள் விற்பனையை அதிகரிக்க ஏதுவாக பெட்டி கடைகள் அமைக்கப்பட்டு தமிழ் புத்தகங்கள் மட்டுமே விற்பனை செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன், முதலில் வருபவருக்கு முன்னுரிமை என்ற முறையில் குறைந்த வாடகையில் வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில் மன்ற தீர்மான எண்.567 நாள் 30.09.2022–ல் அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி, வடசேரி பேருந்து நிலையத்தில் தமிழ் புத்தகக் கடை அமைக்க திருமதி D.சுமிதா என்பவருக்கு உத்திரவு வழங்கப்பட்டது என்பதும், இக்கடை மேற்படி இடத்தில் நடத்தி வந்த நிலையில், பேருந்து நிலையத்தில் பராமரிப்பு பணி நடைபெற்ற காரணத்தினால், மேற்படி புத்தகக் கடை மற்றும் அருகில் உள்ள வங்கி ATM ஆகியவற்றை அருகில் உள்ள இடத்திற்கு மாற்றிக் கொள்ள வாய்மொழியாக அனுமதி அளிக்கப்பட்டதின் பேரில் மாற்றி அமைக்கப்பட்டது என்பதும், திரு ஜான்சன் மற்றும் ராஜேஸ்வரி என்பவர்களின் புகார் கடிதங்களின் அடிப்படையில், மாநகராட்சி வருவாய் ஆய்வாளரால் நேரடியாக ஆய்வு செய்யப்பட்டு, மேற்படி கடையில் புத்தகங்கள், தினசரி நாளிதழ்கள், குடிநீர் பாட்டில்கள் மற்றும் பொருட்கள் வைத்து விற்பனை செய்வது கண்டறியப்பட்டு, கடை உரிமைதாரரிடம் புத்தங்களை தவிர வேறு எந்த பொருட்களும் விற்பனை செய்யக்கூடாது என்றும், பொது மக்களுக்கு இடையூறாக நடந்து கொள்ளக்கூடாது என்றும் நேரடியாக அறிவுறுத்தப்பட்டது என்பதும், திரு S.V. உதயகுமார் 5வது வார்டு மாமன்ற உறுப்பினரின் புகார் மனுவில் மேற்படி கடை உரிமைதாரர் நிபந்தனைகளை மீறி டீ கடை நடத்தி வருகிறார் என்று புகைப்படத்துடன் தெரிவித்ததின் அடிப்படையில் மாநகராட்சியின் ஏல நிபந்தனைகளை மீறி செயல்பட்டதால் கடை உரிமையாளருக்கு வழங்கப்பட்ட உரிமத்தினை ரத்து செய்து மேற்படி கடை காலி செய்யப்பட்டது என்பதும், மேற்கண்ட கடை அரசாணையின்படி கடை ஒதுக்கீடு செய்யப்பட்டதினால், அரசுக்கு எந்தவித வருவாய் இழப்பு இல்லை என்பதும்,நாகர்கோவில் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவி ஆணையர், உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் புகாரில் குறிப்பிட்டுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்தில் உள்ள கடையில் அரசு ஆணை (2ப) எண் 120, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.4) துறை நாள் 10.07.2007ன்படி தமிழ் புத்தக்கடை மட்டும் வைத்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் திருமதி D.சுமிதா என்பவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கடையில், நிபந்தனைகளை மீறி டீ கடை வைத்துள்ளதாக மனுதாரர் அளித்த புகாரின் அடிப்படையில் மாநகராட்சியால் ஆய்வு செய்ததில், மாநகராட்சி நிபந்தனைகளை மீறி டீ கடை

நடத்தி வந்துள்ள நிலையில் கடை உரிமையாளருக்கு வழங்கப்பட்ட உரிமத்தினை ரத்து செய்து மேற்படி கடை காலி செய்யப்பட்டது என்றும், மேற்கண்ட கடை அரசாணையின்படி கடை ஒதுக்கீடு செய்யப்பட்டதினால், அரசுக்கு எந்தவித வருவாய் இழப்பும் இல்லை என்று நாகர்கோவில் மாநகராட்சி உதவி ஆணையர் மற்றும் உதவியாளர் ஆகியோர் தங்களது வாக்குமூலத்தில் தெரிவித்திருந்தாலும், இது போன்ற நிகழ்வுகள் இனி நிகழாவண்ணம் இருக்க உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு நாகர்கோவில் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது. இதில் வருவாய் இழப்பு ஏற்பட்டதா என்பது குறித்து சிறப்புத் தணிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் மாநகராட்சி அலுவலர்கள் அடிக்கடி கள ஆய்வு மேற்கொண்டு இது போன்ற புகார்களை தங்களது நடவடிக்கையின் மூலம் தவிர்க்க வேண்டும் என நாகர்கோவில் மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தியும் இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 3–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) S.V.உதயகுமார்
கதவு எண் 439A, M.S ரோடு, பார்வதிபுரம்,
நாகர்கோவில்–629 003.

(2) ஆணையர்,
நாகர்கோவில் மாநகராட்சி,
நாகர்கோவில்,
கன்னியாகுமரி மாவட்டம்.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

(4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ. / உதிரிகள்.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது// 5/11/25

செயலாளர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
வாய்மையே வெல்லும்
சென்னை–600 032